டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.10.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 091 - Madurai | Online Edition

# மசாலா முதல் கடல் உணவு வரை ஜிஎஸ்டி சீர்திருத்தம் கேரளாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கிறது

புது தில்லி, அக்.8

கேரளாவில் விவசாயம், கடல்சார் வளங்கள், பயிர் வகைகள் மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி பெருமளவில் உள்ளது.

ஒவ்வொரு துறையும் ஏராளமானவர்களுக்கு வாழ்வாதாரத்தை அளித்து வருகிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்த நடவடிக்கைகள் பல்வேறு முக்கிய துறைகளில் வரி விகிதத்தைக் குறைத்துள்ளதுடன் பொருட்கள் மற்றும் சேவைகள் குறைந்த விலையில் கிடைப்பதற்கும் ஏற்றுமதியில் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்கும் வருவாய்க்கான வாய்ப்புகளை வலுப்படுத்துவதற்கும் உதவிடும் வகையில் அமைந்துள்ளது.

இடுக்கி மற்றும் வயநாடு பகுதிகளில் உள்ள மசாலா பயிர்வகைகளைப் பயிரிடும் தோட்டங்கள், ஆழப்புழாவில் உள்ள தென்னை நார் தொழிற்சாலை, கொச்சி மற்றும் கன்னூரில் உள்ள மீன்பிடித் தொகுதிகள், கொல்லத்தில் உள்ள முந்திரி உற்பத்தி போன்ற பல்வேறு தொழில்கள் ஜிஎஸ்டி சீர்திருத்த நடவடிக்கைகளால் உத்வேகம் பெற்றுள்ளது. பொருட்கள் தவிர சேவைகள் துறையிலும் குறிப்பாக சுற்றுலா, ஆயுர்வேதம் மற்றும் நலவாழ்வு தொடர்பான துறைகளில், ஜிஎஸ்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது அவற்றுக்கான செலவுகளை வெகுவாகக் குறைத்துள்ளது.



கொல்லத்தை மையமாகக் கொண்ட முந்திரி பதனிடும் தொழிற்சாலைகளில் 3 லட்சத்துக்கும் அதிகமான பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். முந்திரிக் கொட்டைகளைப் பிரித்தல், தோல் உரித்தல் மற்றும் தரம் பிரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் சிறிய அளவிலான குடிசைத் தொழிலாகவும், கூட்டுறவு தொழிலாகவும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்திரி மீதான ஜிஎஸ்டி விகிதம் 5 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது அத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிகரமாக அமைந்துள்ளது.

புவிசார் குறியீட்டுடன் கூடிய தென்னை நார் பொருட்களான பாய்கள், கயிறுகள் மற்றும் நார் இழையிலான ஜவுளிகளுக் கான ஜிஎஸ்டி விகிதம் 18 சதவீதத்திலிருந்த 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது கேரளாவில் உள்ள 85 சதவீத தென்னை நார் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு பெரிதும் உத்வேகமாக அமைந்துள்ளது.

## மதுரை மாவட்டத்தில் ராபி சிறப்பு பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

மதுரை, அக்.8

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்கள் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஈடு செய்து வாழ்வாதாரத்தை மீட்கும் வகையில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 2025-2026ம் ஆண்டிற்கு ராபி சிறப்பு பருவத்தில் (சம்பா) பயிர் காப்பீடு அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்துள்ள நெல்–II, மக்காச்சோளம்–II மற்றும் பருத்தி–II பயிருக்கு பயிர் காப்பீடு செய்யலாம். மதுரை மாவட்டத்தில் நடப்பாண்டில் Universal Sompo general Insurance நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பு ராபி சிறப்பு பருவத்தில் நெல்–II, மக்காச்சோளம்–II மற்றும் பருத்தி–II ஆகிய பயிர்கள் பிர்கா அளவில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பு செய்யப்பட்டுள்ள பிர்க்காகளை சார்ந்த கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பயிர் கடன் பெறும்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக தங்கள் விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

கடன் பெறாத விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுக்கான அடங்கல் சான்றை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று அதனுடன் சிட்டா, வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை இணைத்து பொது சேவை மையங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக பதிவு செய்து கொள்ளலாம்.

காப்பீடு கட்டணம் ஏக்கருக்கு நெற்பயிருக்கு ரூ.540/- மக்காசோளத்திற்கு ரூ.484/- பருத்திக்கு ரூ.222/- காப்பீட்டு தொகை ஆகும்.




நெல்-II மக்காச்சோளம்-II மற்றும் பருத்தி-II பயிர்களுக்கு 15.11.2025 ஆம் தேதி வரையில் விவசாயிகள் தங்கள் பயிருக்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.

பதிவு செய்யும் போது விவசாயின் பெயர் மற்றும் விலாசம், நிலப்பரப்பு, சர்வே எண் மற்றும் உட்பிரிவு, பயிரிட்டுள்ள நிலம் இருக்கும் கிராமம் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களை சரியாக கவனித்து பதிவு செய்து கொள்ளவும். எனவே பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்து விவசாயிகள் பயன்பெற வேளாண்மை இணை இயக்குநர், கே.பி.முருகேசன் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# நன்மை அளிக்கும் பொட்டாஷ் பாக்டீரியா திரவ வடிவில் 50 சதவீத மானிய விலையில் கிடைக்கும்



ராணிப்பேட்டை, அக்.8

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமாரி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

நெல் மணிலா மற்றும் பயறு வகைப் பயிர்களுக்கு பொட்டா சியம் சத்து இன்றியமையாதது. தரமான நெல் மணிகள் பிடிப்பதற்கும் மற்றும் காய்கள் நன்கு திரண்டு அதிக அளவில் காய்ப்பதற்கும் சாம்பல் சத்தாகிய பொட்டாசியம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த பொட்டாசியம் சத்து இயற்கை யாகவே மண்ணில் உள்ளது. ஆனால் பல்வேறு காரணிகளால் வேர்களால் இதை எடுத்துக் கொள்ள முடிவதில்லை. மண்ணில் உள்ள சிலிக்கான் சத்தைக் கரைத்து பொட்டாசியத்தை தனியாக பிரித்து பயிர்களுக்கு கொடுக்கும் வேலையை பொட்டாஷ் பாக்டீரியா சிறப்பாக செய்கிறது. இவ்வாறு நன்மை அளிக்கும் பொட்டாஷ் பாக்டீரியா திரவ வடிவில் 50 சதவீத மானிய விலையில் நெமிலி வட்டார வேளாண் துறை அலுவலகத்தில் இருப்பு உள்ளது. ஒரு லிட்டரின் மொத்த விலை ரூ.300. இதில் 50 சதவீத மானியத்தில் ரூ.150/ -க்கு வழங்கப்படுகிறது. 1 ஏக்கருக்கு 1 லிட்டர் போதுமானது. இதை மணலில் கலந்து உரம் போல பயன்படுத்தலாம் அல்லது 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஸ்பிரேயர் மூலம் மாலை 4 மணிக்கு மேல் தெளிக்கலாம்.

அதற்கு முன்பு 10 நாட்களும் பின்பு 10 நாட்களும் வேறு ரசாயன உரங்களை நிலத்திற்கு போடக்கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**
**பா.இளங்கோவன்**
**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

**ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.**







**குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்**
**இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை**
**அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை**
**திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை**

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும்

## மேட்டூர் விவசாயி வலியுறுத்தல்




இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும். தற்போது இயற்கை விவசாயம் குறித்து மத்திய, மாநில அரசுகள் பல்வேறு விழிப்புணர்வு பயிற்சிகள், மானியங்கள் அளித்தாலும், அவை குறித்து தெரிந்து கொள் வதோடு, விட்டுச் செல்கின்றனர். இது சரியான அணுகுமுறை அல்ல என்று ஆதங்கப்படுகிறார் மேட்டூர் அணைப் பகுதியைச் சேர்ந்த இயற்கை விவசாயி பெ.அர்ச்சுனன்.

பெ.அர்ச்சுனன் 'அக்ரி டாக்டர்' மின்னிதழுக்கு அளித்த பேட்டி, 50 வயதான இயற்கை விவசாயி அர்ச்சுனனின் குடும்பம் விவசாயக் குடும்பம். பாரம்பரியமாக ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வந்த அர்ச்சுனன், கடந்த 7 ஆண்டுகளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இதற்கு, ரசாயன உரங்கள் பயன்படுத்து வதால், நிலம் விஷத்தன்மையை அடைகிறது என்பது குறித்து அவருக்கு ஏற்பட்ட விழிப்புணர்வு தான்.

மத்திய, மாநில வேளாண் துறையினர் அளித்த பல்வேறு பயிற்சிகள் மூலம் இயற்கை வேளாண்மையின் சிறப்பை அறிந்து கொண்டுள்ளார் அர்ச்சுனன். அவர் மேலும் கூறிய தாவது, எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம். நான் 10-வது வகுப்பு வரை படித்துள்ளேன். மேட்டூர் அணையிலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கோல்நாயக்கன்பட்டிதான் எங்களது கிராமம்.

இங்கு சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் கடந்த 7 ஆண்டுகளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். உடல் பிணியின்றி வாழலாம் என்ற எண்ணத்தில் இயற்கை விவசாயம் செய்யத் தொடங்கினேன்.



எங்கள் பகுதியானது, வாய்க் கால் பாசனத்தை நம்பியுள்ளது. நெல், கீரை, கடலை, காய்கறிகள், தக்கப்பூண்டு, பல தானியங்கள்

ஆகியவற்றை பயிரிட்டு வருகிறேன். அவ்வப்போது அங்கக வேளாண் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று, வேளாண் அதிகாரிகள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு, அதைப் பின்பற்றி வருகிறேன். நெல் தேர்வு செய்தல், விதை நேர்த்தி செய்தல் குறித்து பயிற்சி அளிக்கின்றனர். நான் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்வதோடு, நான் கற்றுக்கொண்டதை, எனது அனுபவத்தை விவசாயிகளுக்குப் பயிற்சியாக அளித்து வருகிறேன்.

மேலும், இயற்கை உரங்கள் தயாரிக்க சாணம், கோமியம் உள்ளிட்டவை தேவை. இதற்காக, மாடு, ஆடு, கோழிகளையும் வளர்த்து வருகிறோம். மேலும், உரக்கூடத்தை அமைத்துள்ளோம். இங்கு மீன் அமிலம், பஞ்ச காவ்யம், கரைசல் உள்ளிட்டவற்றைத்






தயாரித்து, எங்களது வயலுக்குப் பயன்படுத்தி வருகிறோம். மேலும், பிற இயற்கை விவசாயிகளுக்கும் அவற்றை விற்பனை செய்கிறோம்.

உரக் கூடம் அமைப்பதற்கு வேளாண் துறையினர் ரூ.1 லட்சம் மானியம் அளித்துள்ளனர். ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி களைப் பயன்படுத்தி விவசாயம் செய்தால், ஏக்கருக்கு ரூ.10,000/-க்கு மேல் செலவாகும். ஆனால், இயற்கை விவசாயத்துக்கு ஆகும் செலவு ரூ.5,000 மட்டுமே. மேலும், சத்துமிக்க விளைபொருள்களையும் நம்மால் பெற முடியும். அதுபோல, ரசாயன உரங்களைப் பயன்படுத்தி நெல் பயிரிட்டால், ஏக்கருக்கு 8 மூட்டை கிடைக்கும். இயற்கை விவசாயத்தில் 6 மூட்டை கிடைக்கும். இதனால், நமக்கு கிடைக்கும் வருமானத்தில் பெரிய அளவில் ஏற்றத்தாழ்வு இருக்காது.

முக்கியப் பயிர்களை வருடத்துக்கு 2 முறை பயிரிடுவேன். இடைப்பட்ட காலத்தில் தானியங்களைப் பயிரிடுவேன். இந்த விவசாயப் பணிகளை எங்களது குடும்ப உறுப்பினர்களே செய் கிறோம். களை எடுத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு வேலையாள் களை நாடுகிறோம். ரசாயன உரங்கள், ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் நிலத்தை மாசுபடுத்துகின்றன. விளைபொருள்கள் விசப் பொருள் களாகின்றன. இதுபோன்ற ரசாயன உரங்களைப் பயன்படுத்து வதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து, இயற்கை வேளாண் பயிற்சி வகுப்புகளில் அதிகாரிகளும், முன்னோடி விவசாயிகளும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றனர்.

பயிற்சியின்போது, இயற்கை விவசாயத்துக்கு மாறுகிறோம் என்று கூறிச் செல்லும் விவசாயிகளில் பெரும்பாலானோர், பின்னர் அதைப் பின்பற்றுவதில்லை. பல பயிற்சி முகாம்களில் நான் இதைக் கண்டுள்ளேன். அரசு பல்வேறு பணிகளுக்கு மானியம் வழங்குகிறது. இதை விவசாயிகளாகிய நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் நலமுடன் இருக்க, நாட்டு மக்கள் நலம் பெற இயற்கை விவசாயமும் அதன் மூலம் விளைவிக்கப்படும் விளைபொருள்களும் சிறந்தவை என்பதை உணர்ந்து நாம் அதைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார் இயற்கை விவசாயி பெ.அர்ச்சுனன்.



**தொடர்புக்கு : 96290 88580.**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் நெல் நடவு



கோயம்புத்தூர், அக்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவையில் இளங்கலை வேளாண்மை (மேதமை) மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் நன்செய் பண்ணையில் நெல் நடவு செய்தனர். இளங்கலை (வேளாண்மை) படிக்கும் மாணவர்கள் தாங்கள் படித்த அறிவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தானாக நெற்பயிர் பயிரிட வேண்டும். மாணவர்களுக்கு 4 சென்ட் அளவு நிலம் வழங்கப்படும். அதில் அவர்கள் சேற்றுழவு முதல் அறுவடை முதலான அனைத்து பணிகளையும் செய்ய வேண்டும். நெற்பயிர் நடவு நன்செய் பண்ணையில் 7.10.25 அன்று நடைபெற்றது. காலை 6.30 மணியளவில் மாணவர்கள் நடவுப் பணியை செய்ய துவங்கினர். தொடக்க விழாவில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாடப்பேராசிரியர் முனைவர் மு.திருகுமரன் வரவேற்றார்.

முனைவர் சு.கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை, மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். முனைவர் சூ.வெங்கடேசபழனிசாமி, முதன்மையர் (வேளாண்மை) விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நெல் நடவு விழாவை தொடங்கி வைத்தார். மேலும் இவ்விழாவில் முனைவர் ஆ. மு.கலாராணி, இயக்குநர் (பயிர் மேலாண்மை இயக்குநரகம்), முனைவர் சு.உமாராணி, இயக்குநர் (விதை உற்பத்தி), முனைவர் ஏ.பாலசுப்ரமணி (தேர்வு கட்டுப்பாட்டாளர்), ஆகியோர் நடவு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர். பின்பு பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வயலில் இறங்கி மாணவர்களுடன் சேர்ந்து நெல் நடவை தொடங்கி வைத்தனர். பாட பேராசிரியர் முனைவர் மணிவண்ணன், முனைவர் பிரபுகுமார், முனைவர் சங்கீதா மற்றும் முனைவர் நாகராஜன் ஆகியோர் நெல் நாற்று நடவு விழாவினை ஏற்பாடு செய்தனர்.

# விதை விற்பனை நிலையங்களுக்கு விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை

இராமநாதபுரம், அக்.8

விதை உற்பத்தி, கொள்முதல் மற்றும் விற்பனை விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதை கட்டுப்பாட்டு ஆணை 1983 மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955-ன்படி நடைபெற வேண்டும் என்று இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா அறிவுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்காணும் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

விதை விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியல் மற்றும் இருப்பு விவரப்பலகை வைக்காமல் இருப்பது, விதை கொள்முதல் பட்டியல், இருப்பு பதிவேடு, விற்பனை ரசீது ஆகியவைகளை சரிவர பராமரிக்காமல் இருப்பது, பொதுச் சுகாதரம் பேணாமல் இருத்தல், விதைகள் சேமிப்பு முறையாக செய்யாமல் இருப்பது, விதை விற்பனை நிறுவனங்களை நீண்ட/பெரும்பாலான காலத்திற்கு மூடி வைத்திருப்பது போன்ற காரணங்களுக்காக இவ்வாண்டு இதுநாள் வரை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களுக்கு 31 நோட்டீஸ்களும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிறுவனங்களுக்கு 48 நோட்டீஸ்களும் வழங்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்ய சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே விதை விற்பனை நிலையங்கள் மேற்படி விதைச்சட்டம் மற்றும் விதிகளின்படி இயங்க வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கொய்யா சாகுபடியில் செய்ய வேண்டிய முக்கிய நுட்பங்கள் எவை தெரியுமா?



கொய்யா தமிழகம் முழுவதும் பயிரிட கூடிய பழ வகை பயிராகும். வெப்ப மண்டல மற்றும் மித வெப்ப மண்டல பயிராக உள்ளது.

ஆண்டின் மழை அளவு 1000 மி.மீ வரை நன்றாக வளரும். வண்டல் மண் தொடங்கி அனைத்து வகையான மண்ணிலும் நன்றாக வளரும். நல்ல வடிகால் வசதி உள்ள இடங்கள் சாகுபடிக்கு மிகவும் உகந்ததாகும்.

கொய்யா சாகுபடியில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான தொழில்நுட்ப ங்களை மட்டுமே இந்த பதிவில் காண்போம்.

**1) கொய்யா காய்ப்பு ஒழுங்கு படுத்துதல்**

கொய்யாவில் பருவ கால விளைச்சல் மற்றும் குளிர் கால விளைச்சல் என இருவகை விளைச்சல் (காய்ப்பு சீசன்) நிகழும். பருவ கால விளைச்சலுடன் ஒப்பிடுகையில குளிர் காலத்தில் பழத்தின் தரம் உயர்ந்தும், அதிக விலைக்கும் போகும். இதனால் தான் என்னவோ கொய்யா சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும்பாலும் பூக்களை கிள்ளி விடுவதன் மூலமாக பருவ கால காய்ப்பை தவிர்க்கின்றனர்.

இதற்காக மாலிக் அமிலம் / நாப்தாலிக் அமிலம் (ஹி.பு.பு) மற்றும் 2, 4-ம் (30 PPM) இவற்றில் ஏதாவது ஒன்றை தெளிக்கலாம். மேலும் செடியை கவாத்து செய்வதும் சில சமயம் கிளைகளை வளைத்து விடுவதன் மூலமாக பூக்களை அரும்ப செய்யலாம்.

**2) பழ ஈக்களைகட்டுபடுத்துதல்**

அதிக காய்ப்பு நேரங்களில் பழ ஈக்கள் தொந்தரவு அதிகமாக இருக்கும். இதற்கு கருவாட்டு பொறியை பயன்படுத்திடலாம். பழங்கள் காயாக உருவாகும் முன்னதாக பாஸ்போ மிடான்

5 மி.லி மருந்தினை ஒரு லிட்டர் நீர் என்றளவில் தெளிக்கலாம். மாவு பூச்சி தாக்குதலும் மிக வறண்ட காலங்களில் இருக்கும். காய்கள் உள்பட இதனுடைய தாக்குதல் இருக்கும். மாலத்தியான் மருந்து தெளிக்கலாம்.

**அறுவடை**

காய்ப்புகள் அதிகமாக உருவாக்கிட முடியும். ஆனால் விவசாயிகள் சரியான பக்குவத்தில் சரியான தருணத்தில் அறுவடை செய்வதில்லை. இதனால் பழங்கள் நன்றாக பழுத்து விடும். பழுத்த பழங்கள் விற்பனை செய்ய லாயக்கற்றது. அடர்பச்சை நிறத்திலிருந்து வெளிறி பச்சை அல்லது மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் அறுவடை செய்தால் எளிதாக விற்பனை செய்யலாம். அதிக விலையும் கூடுதலான வருமானமும் கிடைக்கும்.

சாதாரண நாட்டு ரகத்தில் ஒரு மரத்தில் சாரசரியாக 90 கிலோ பழங்கள் கிடைக்கும். ஆனால் ஓட்டு கட்டிய மரத்தில் இருந்து 340-370 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மதுரை பல்நோக்கு சமூக சேவா சங்கத்தின் சார்பில் 'உலக இயற்கை பேரழிவு குறைப்பு' தின விழா



விருதுநகர், அக்.8

மதுரை பல்நோக்கு சமூக சேவா சங்கத்தின் சார்பில் 'உலக இயற்கை பேரழிவு தினம் (INTERNATIONAL DAY OF DIASTER RISK REDUCTION) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரத்தை சேர்ந்த ஆலடிபட்டி கிராம சர்ச் வளாகத்தில் பங்கு தந்தையின் நல்லாசியுடன் நேற்று கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சுமதி (செயலாளர் பனிமயமாதா மகளிர் குழு) விழாவில் கலந்து கொண்டவர்களை வரவேற்றார்.

இறை வணக்கப்பாடலுடன் விழா தொடங்கியது. இந்த விழா–விற்கு தலைமை தாங்கிய பொருட்செல்வி தனது தலைமை உரையில், இயற்கை பேரழிவுகள் காற்று, வெள்ளம், பூகம்பம், நிலச்சரிவு போன்றவற்றால் அதிகமான பேரழிவுகளை நாம் கண்கூடாக பார்க்கிறோம். சுனாமி போன்ற பேரழிவுகளிலிருந்து மக்கள் இன்னும் மிளவில்லை. இந்த நிலையில் இயற்கை பேரழிவுகளை குறைப்பதற்கான வழிமுறைகளை ஒவ்வொரு வரும் கடைபிடிக்க வேண்டுமென கூறினார். நெகிழி பயன் பாட்டை குறைத்தல், எரிபொருள் சிக்கனம், அதிக மரங்களை நடுதல் போன்றவற்றை நாம் கடைபிடிக்க வேண்டுமென கூறினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்த கொண்ட அக்ரி சந்திர சேகரன் பேசுகையில், இயற்கை பேரிழிவுகளான, பூகம்பம் வறட்சி வெள்ளம், சுழல் காற்று போன்றவை காலத்து காலம் எதாவது ஒரு வகையில் மனித குலத்திற்கு பேரழிவை எற்படுத்திக் கொண்டே இருக்கிறது. அது மட்டுமல்ல தேவைக்கு அதிகமாக இரசாயன உரங்கள், பூச்சி மருந்து பயன்பாடுகளால் இன்றைய சூழலில் மண் மலட்டு தன்மையை நோக்கி பயணிக்கிறது. இது போன்ற இடர்பாடுகளை களைய இந்த நாளில் நாம் உறுதி எடுப்போம்.

இதை நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் கடைபிடித்தால் இயற்கை பேரழிவுகளை குறைக்கலாம் என்றார். காலநிலை மாற்றத்தால் ஆடியில் வழக்கமாக பெய்கின்ற மழை இன்று புரட்டாசி வரை சரிவர பெய்யாத நிலையில் தான் உள்ளது. இயற்கையின் ஒவ்வொரும் மாற்றமும் பட்டம் பருவம் தவறி போய் சாகுபடி செய்ய இயலாத நிலையில் பல நிலங்கள் தரிசாக உள்ளது என்றார்.

MMSS பணியாளர் ஞானம் பேசுகையில், எதோ எங்கேயோ நடக்கிறது என்று எண்ணாமல் இயற்கை பேரழிவை குறைப்பதற்காக முயற்சி மேற்கொள்ள வேண்டுமென கூறி விழாவிற்கு வந்த அனைவரையும் இயற்கை பேரழிவு குறைப்பதற்கான உறுதி மொழியை வாசித்து உறுதி எடுக்க கூறினார். நிறைவாக ஜான்சி நன்றி கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இப்கோ நானோ உரங்கள்– ஓர் பார்வை

சென்னை, அக்.8

இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க் மற்றும் நானோ காப்பர் நவீன நானோ தொழில்நுட்பத்தால் குருணை உரங்களுக்கு மாற்றாக உருவாக்கப்பட்டுள்ளது.

**நானோ யூரியா**

நானோ யூரியா 20% தழைச்சத்து கொண்டது. பயிர்களுக்கு



தேவையான தழைச்சத்தை திறம்பட பூர்த்தி செய்து, பயரின் வளர்ச்சியை அதிகரிக்கும். மேலும், நுண்ணூட்டச் சத்துக்களின் செயல்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.

### நானோ டி.ஏ.பி

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதை நேர்த்திசெய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

### நானோ ஜிங்க்

நானோ ஜிங்க் தாவர வளர்ச்சிக்கான ஹார்மோன்களை சீராக்கி விதை வளர்ச்சி மாற்றம் மகரந்த சேர்க்கையை மேம் படுத்தும். பயிர்களில் ஜிங்க்சத்து குறைபாட்டை பூர்த்தி செய்து வேர் மற்றும் தண்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். ஒரு ஏக்கருக்கு 100 மில்லி லிட்டர் என்றளவில் இலைவழியாகவோ சொட்டுநீர்ப் பாசனம் மூலமோ பயன்படுத்தலாம்.

### நானோ காப்பர்

நானோ காப்பர் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம் படுத்தி காய்க்கும் திறனை அதிகரிக்கும். ஒரு ஏக்கருக்கு 100 மில்லி லிட்டர் என்றளவில் இலைவழியாகவோ சொட்டுநீர்ப் பாசனம் மூலமோ பயன்படுத்தலாம். நானோ உரங்களை அனைத்து விதமான வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் கலந்தும் தெளிக்கலாம்.



# சென்னை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இணை இயக்குநர் ஆய்வு



திருச்சி, அக்.8

கடந்த 3.10.25 அன்று சென்னை, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இணை இயக்குநர் சு.சாந்தி திருச்சிராப்பள்ளி விதை பரிசோதனை நிலையத்தினை ஆய்வு மேற் கொண்டார்.

திருச்சிராப்பள்ளி விதைப்பரிசோதனைக்கு வரப்பெறும் விதை மாதிரிகளில் விதைகளின் முளைப்புத்திறன் சோதனை, ஈரப்பத சோதனை, புறத்தூய்மைசோதனைமற்றும் பிறரக கலப்பு விதைகளை கண்டறியும் சோதனை முறைகள் எவ்வாறு செயல் படுத்தப்படுகிறது என்ற விவரத்தினை ஆய்வு மேற்கொண்டார்.

திருச்சிராப்பள்ளி விதைபரிசோதனை நிலையத்தின் இலக்கு மற்றும் சாதனை குறித்து ஆய்வு மேற்கொண்டார். திருச்சி விதைப் பரிசோதனைநிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விதைப் பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் விளக்கி கூறினார்.

விதைபரிசோதனை தொடர்பானஅனைத்து பதிவேடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் விதைபரிசோதனை நிலையத்தில் விதை முளைப்புதிறன் அறையை பார்வையிட்டு, கிடைக்கப் பெற்றுள்ள விதை மாதிரிகளிலிருந்து முளைப்புத்திறன் கணக்கிடும் முறையில் இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடின விதை மற்றும் உயிர்ப்பற்ற விதைகள் பகுப்பாய்வு செய்யும் முறையை பார்வையிட்டார். திருச்சி விதைபரிசோதனை நிலையத்தில் இதுவரை சான்றுவிதை மாதிரிகள் 621 எண்களும், ஆய்வாளர் விதை மாதிரிகள் 1078 எண்களும், பணி விதை மாதிரிகள் 1220 எண்களும், ஆக மொத்தம் 2919 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதில் 112 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளன.

இந்நிலையத்திற்கு வரும் விதை மாதிரிகளை சீரிய முறையில் பகுப்பாய்வு செய்து தரமான விதைகளே விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். ஆய்வின் போது, திருச்சிராப்பள்ளி விதைபரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர் ந.சி.அனிதா ஆகியோர் உடனிருந்தனர்.

# நீண்ட இலை பருத்திக்கான சிறப்பு பயிற்சி நடைபெற்றது



கோயம்புத்தூர், அக்.8

கோவை மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் பருத்தித் துறை இணைந்து நடத்தும் உலக பருத்தி தின விழா மற்றும் நீண்ட இலை பருத்திக்கான சிறப்பு பயிற்சி பச்சாபாளையம் கிராமத்தில் மதுக்கரை வட்டாரத்தில் கொண்டாடப்பட்டது.

இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பருத்தித் துறையில் இருக்கும் விஞ்ஞானிகள் முனைவர் ரவி கேசவன், முனைவர் சுப்பிரமணியன், முனைவர் பிரேமலதா, முனைவர் சித்ரா, முனைவர் வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டு உலக பருத்தி தின விழாவில் பருத்தியின் முக்கியத்துவத்தை பற்றியும், நீண்ட இலை பருத்தி பற்றியும், அடர் நடவு முறை பற்றியும், இயந்திரம் மூலம் நடவு மற்றும் அறுவடை செய்வது பற்றியும், பூச்சி மற்றும் நோய் தாக்கம் மற்றும் அதன் கட்டுப்பாட்டையும் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தனர்.

மேலும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுனர் சுரேஷ் குமார் நீண்ட இலை பருத்தி பற்றியும் பருத்திக்கான சிறப்பு திட்டத்தில் நீண்ட இலை பருத்தி அதிக பங்கு வகிக்கிறது என்றும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு மற்றும் மதுக்கரை வட்டாரங்களில் அதிகப்படியாக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்யப்பட்டு அதிக லாபம் தரக்கூடிய பயிராக இருக்கிறது.

மேலும் இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்களின் சந்தேகங்களை ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இளம் வல்லுநர்கள் துரைசாமி மற்றும் சிந்துஜா ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# 'நான் முதல்வன்' திறன்மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காய்கறி மற்றும் பழ நாற்றுகள் உற்பத்தியாளர் பயிற்சி 25 நாட்கள் நடைபெறுகிறது

திருச்சி, அக்.8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 'நான் முதல்வன்' திறன்மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காய்கறி மற்றும் பழநாற்றுகள் உற்பத்தி யாளராக்கும் பயிற்சி 25 நாட்கள் (அக்டோபர் 10 முதல் நவம்பர் 13 வரை) நடைபெறுகிறது.

**பயிற்சியில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்**

1. இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் 18 வயது முதல் 35 வயதுடையவர்களாக இருக்க வேண்டும்.

2. பட்டப்படிப்பு முடித்த மற்றும் வேலையில்லாத இளைஞர்கள் & பெண்கள் பள்ளியை விட்டு வெளியேறிய இளைஞர்கள் & பெண்கள், இந்த திறன் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

3. இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆர்வமுடைய இளைஞர்கள் & பெண்கள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரில் தொடர்பு கொண்டு அல்லது இணைய வழியிலோ (நான் முதல்வன் செயலி வாயிலாக vetri nichayam) அக்டோபர் 9 ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

4. இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்களது புகைப்படம், ஆதார் நகல், வங்கிக் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை பதிவு செய்யும் பொழுது நேரடியாக ஒப்படைக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு, முன்பதிவுக்கு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் சகிலா 04312962854 / 99424 49786 / 85088 35287/ 88381 26730 என்ற எண்ணை (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும்.

தகவல் : முனைவர் சி. ராஜாபாபு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி, அலுவலக எண் – 0431-2962854 /91717 17832.

# டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணி





முட்டை ஒட்டுண்ணி விருதுநகர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு முட்டை ஒட்டுண்ணி அட்டை 40 ரூபாய்.

பூச்சி ஒட்டுண்ணிகளை ஆங்கிலத்தில் பாரசிட்டாய்ட்ஸ் (parasitoids) என்று அழைக்கிறோம். பயிர்களைத் தாக்கும் முக்கிய பூச்சிகளை கட்டுப்படுத்த நன்மை செய்யும் பூச்சி ஒட்டுண்ணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஒட்டுண்ணிகள் தீங்கு செய்யும் பூச்சிகளின் முட்டை, புழு, கூண்டுப் புழுக்களை தேடி அவற்றில் தன் முட்டையிளை வைத்து பின்பு அழிப்பதால் இவை ஒட்டுண்ணிகள் எனப்பெயர் பெற்றன.

**பூச்சியை அழிக்கும் முக்கிய ஒட்டுண்ணிகள்**

- டிரைக்கோகிரம்மா
- டெலினோமஸ்
- டெட்ராஸ்டிக்கஸ்
- பிரக்கோனிட்
- பெத்திலிட்
- சால்சிட்
- இக்னுமானிட்
- எலாஸ்மிட்
- டாக்கினிட்




முட்டை ஒட்டுண்ணி அட்டை பயன்படுத்தி புழுக்கள் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.

● ஒரு ஏக்கர் நெல் பயிரில் 2 சி.சி. அட்டை ஆறு முறை கட்டலாம்.

● பருத்தி பயிரில் 3 சி.சி அட்டை எட்டு முறை கட்டலாம்.

● கரும்பு பயிரில் 2 சி.சி அட்டை ஆறு முறை கட்டலாம்.


● பயறு வகை பயிரில் 5 சி.சி அட்டை மூன்று முறை கட்டலாம்.

● காய்கறி பயிரில் 5 சி.சி அட்டை மூன்று முறை கட்டலாம்.

● அட்டைகளை வாங்கிய நான்கு நாட்களுக்குள் வயலில் கட்டிவிட வேண்டும். அட்டைகளை கவரில் நீண்டநாள் வைத்திருந்தால் குளவிகள் பொறிந்து வெளியில் வந்து இறந்து விடும். இருப்பு வைத்து பயன்படுத்த முடியாது.

● ஒட்டுண்ணி அட்டைகள் கட்டிய பின் 12 நாட்களுக்கு பூச்சி மருந்துகள் தெளிக்கக்கூடாது.

**ஒட்டுண்ணி அட்டை**




**முட்டை ஒட்டுண்ணி அட்டை பருத்தி வயலில் கட்டுதல்**



**முட்டை ஒட்டுண்ணி அட்டை மக்காசோளம் வயலில் கட்டுதல்**

# தமிழ்நாட்டில் பாரம்பரிய மருத்துவப் பயிர் சாகுபடி

இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளான ஆயுர் வேதம், சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றில், தமிழ்நாட்டின் பங்கு இன்றியமையாதது. தமிழ்நாட்டின் வளமான மண் மற்றும் சாதகமான காலநிலை பலவிதமான மூலிகைகள் மற்றும் மருத்துவப் பயிர்கள் சாகுபடிக்கு உகந்தது.



இந்த மூலிகைகள், பல நூற்றாண்டுகளாக, பல நோய் களுக்கு சிகிச்சையளிக்கவும், உடல்நலத்தை மேம்படுத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மருத்துவப் பயிர் சாகுபடி, ஒரு விவசாய வருமான ஆதாரமாக மட்டுமல்லாமல், சுகாதாரப் பாதுகாப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**தமிழ்நாட்டில் மருத்துவப் பயிர் சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் வரலாறு**

வரலாற்றுப் பின்னணி தமிழ்நாடு, சித்த மருத்துவத்தின் பிறப் பிடமாகக் கருதப்படுகிறது. சித்த மருத்துவம் என்பது பண்டைய தமிழர் மருத்துவ முறை. இந்த மருத்துவத்தில், தாவரங்கள், கனிமங்கள் மற்றும் விலங்குகளின் பொருட்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. சித்தர்கள் மற்றும் முனிவர்கள், இமய மலை, மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் போன்ற பகுதிகளில் பல மருத்துவ மூலிகைகளைக் கண்டறிந்து, அவற்றின் மருத்துவ குணங்களைப் பற்றி ஆவணப்படுத்தியுள்ளனர். இந்த பாரம்பரிய அறிவு, தலை முறையிலிருந்து தலைமுறைக்கு கடத்தப்பட்டு, தமிழ்நாட்டில் மருத்துவப் பயிர் சாகுபடியின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

**பொருளாதார முக்கியத்துவம்**

- **விவசாயிகளுக்கு வருமானம் :** மருத்துவப் பயிர்கள், மற்ற வழக்கமான பயிர்களை விட அதிக வருமானத்தை ஈட்ட உதவு கின்றன. எடுத்துக்காட்டாக, அஸ்வகந்தா, நிலவேம்பு மற்றும் சோற்றுக் கற்றாழை போன்ற பயிர்கள், குறைந்த முதலீட்டில் நல்ல லாபம் தருகின்றன.

- **வேலைவாய்ப்பு :** மருத்துவப் பயிர்கள் சாகுபடி மற்றும் பதப்படுத்துதல் துறையில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகின்றன.

- **ஏற்றுமதி வாய்ப்பு :** இந்திய மருத்துவ மூலிகைகளுக்கு உலகளவில் பெரும் தேவை உள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மூலிகைகள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியை ஈட்ட உதவுகின்றன.

**சமூக முக்கியத்துவம்**

- **சுகாதாரப் பாதுகாப்பு :** பாரம்பரிய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படும் மூலிகைகள், கிராமப்புற மற்றும் பழங்குடி மக்களின் முதன்மை சுகாதார ஆதாரமாக உள்ளன. குறைந்த செலவில் மருந்துகளைப் பெற இது உதவுகிறது.

● **உயிரினப் பன்மயத்தைப் பாதுகாத்தல் :** மருத்துவப் பயிர்கள் சாகுபடி, அரிய மற்றும் அழிந்து வரும் தாவர இனங்களை பாதுகாக்கவும், உயிரினப் பன்மயத்தை நிலை நிறுத்தவும் உதவுகிறது.

**தமிழ்நாட்டில் பரவலாக சாகுபடி செய்யப்படும் பாரம்பரிய மருத்துவப் பயிர்கள்**

தமிழ்நாட்டில், பல்வேறு தட்பவெப்பநிலை மற்றும் மண் வகைகள் இருப்பதால், பலவிதமான மருத்துவப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

**அவற்றுள் சில முக்கியமானவை**

1. **நிலவேம்பு (Andrographis paniculata) :** இது ஒரு கசப்பான மூலிகை. டெங்கு, காய்ச்சல் மற்றும் சளி போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது. நிலவேம்பு குடிநீர், தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான ஒரு பாரம்பரிய மருந்து.

2. **சோற்றுக் கற்றாழை (Aloe vera) :** அழகு சாதனப் பொருட்கள், ஜூஸ் மற்றும் பல தோல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. இது, தமிழ்நாட்டின் வறண்ட மற்றும் மிதமான வறண்ட நிலங்களில் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது.

3. **அஸ்வகந்தா (Withania somnifera) :** இது ‘இந்திய ஜின்செங்‘ என்று அழைக்கப்படுகிறது. மன அழுத்தத்தைக் குறைக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் இது உதவுகிறது.

4. **துளசி (Ocimum sanctum) :** இது ஒரு புனிதமான செடி. சளி, இருமல், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

5. **நன்னாரி (Hemidesmus indicus) :** இது ஒரு நறுமணமுள்ள செடி. இது இரத்தத்தை சுத்திகரிக்கவும், உடல் வெப்பத்தைக் குறைக்கவும் உதவுகிறது. நன்னாரி சர்பத் மிகவும் பிரபலமான கோடை பானம்.

6. **சர்ப்பகந்தி (Rauwolfia serpentina) :** இது உயர் இரத்த அழுத்தம் மற்றும் நரம்பு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

7. **வேம்பு (Azadirachta indica) :** இது ஒரு கசப்பான மரம். இது பூஞ்சை எதிர்ப்பு, வைரஸ் எதிர்ப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.

● **சந்தைப் பிரச்சனை :** மருத்துவப் பயிர்களுக்கு நிலையான சந்தை இல்லை. இடைத்தரகர்களின் தலையீட்டால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை.

● **தொழில்நுட்பப் பற்றாக்குறை :** நவீன சாகுபடி முறைகள், அறுவடை மற்றும் பதப்படுத்துதல் தொழில்நுட்பங்கள் குறித்த அறிவு விவசாயிகளுக்கு குறைவாகவே உள்ளது.

● **தரக் கட்டுப்பாடு :** மூலிகைகளின் தரம் மற்றும் மருத்துவ குணம் மாறுபடலாம். இது சர்வதேச சந்தையில் போட்டியிட ஒரு தடையாக உள்ளது.

● **சட்டப்பூர்வமான தடைகள் :** சில மருத்துவப் பயிர்கள், வன விலங்கு பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. இது சாகுபடியை கடினமாக்குகிறது. அரசு ஆதரவு மற்றும் திட்டங்கள் தமிழ்நாடு அரசு, மருத்துவப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

● **தேசிய ஆயுஷ் இயக்கம் (National AYUSH Mission) :** இந்த இயக்கத்தின் கீழ், மருத்துவப் பயிர்கள் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

● **மருத்துவப் பயிர் வாரியம் (Medicinal Plants Boar) :** இந்த வாரியம், மருத்துவப் பயிர் சாகுபடி, சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி குறித்த ஆலோசனைகளை வழங்குகிறது.

● **வேளாண் பல்கலைக்கழகங்கள் :** தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மருத்துவப் பயிர்கள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. புதிய ரகங்களை உருவாக்குதல், சாகுபடி முறைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளில் இது ஈடுபட்டுள்ளது. எதிர்காலப் பார்வை தமிழ்நாட்டில் மருத்துவப் பயிர் சாகுபடிக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் உள்ளது. ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவம் போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கு உலகளவில் தேவை அதிகரித்து வருகிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்ய, தமிழ்நாட்டில் மருத்துவப் பயிர் சாகுபடியை ஊக்குவிப்பது அவசியம்.



● **சந்தை இணைப்பு :** அரசு, விவசாயிகளை பதப்படுத்துதல் ஆலைகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் நேரடியாக இணைக்க வேண்டும். இது விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்யும்.

● **ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு :** மருத்துவப் பயிர்கள் குறித்த ஆராய்ச்சியை ஊக்குவிப்பது அவசியம். புதிய ரகங்களை உருவாக்குதல், பாரம்பரிய மருத்துவ அறிவை ஆவணப் படுத்துதல் மற்றும் மூலிகைகளின் மருத்துவ குணங்களை அறிவியல் பூர்வமாக நிரூபித்தல் போன்றவை முக்கியம்.

● **விவசாயிகளுக்கு பயிற்சி :** நவீன சாகுபடி முறைகள், அறுவடை மற்றும் பதப்படுத்துதல் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.





தமிழ்நாட்டில் பாரம்பரிய மருத்துவப் பயிர் சாகுபடி, ஒரு விவசாய வருமான ஆதாரமாக மட்டுமல்லாமல், மாநிலத்தின் சுகாதார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கிய பங்களிப்பை அளிக்கிறது.

அரசு மற்றும் விவசாயிகள் இணைந்து செயல்பட்டால், தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவப் பயிர் தலைநகராக மாற்ற முடியும்.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ. ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333